இணைப்பு

[190 ஆம் பக்கத்தில் இனம் 2 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தற்போது தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. 210 மெக்காவாட் திறன் கொண்ட மூன்று பிரிவு கொண்ட இந்நிலையத்திற்கு, கிழக்கிந்திய நிலக்கரி சுரங்கங்களிலிருந்து, ஹால்டியா துறைமுகம் வழியாக மாதம் ஒன்றுக்கு 2,20,000 டன், மற்றும் ஜெகநாத் சுரங்கங்களிலிருந்து பாரதீப் துறைமுகம் வழியாக, 20,000 டன் நிலக்கரியும் கிடைக்க வேண்டும். ஆனால் பாரதீப் துறைமுகம் மூலம் இதுவரையில் நிலக்கரி கிடைக்கவில்லை. ஜனவரி 1983-லிருந்து ஜனவரி 1984 முடிய இந்நிலையத்திற்கு 26.80 லட்சம் டன் நிலக்கரி வரவேண்டும். ஆனால், மொத்தம் 17.12 லட்சம் டன் மட்டும், அதாவது மாதம் ஒன்றுக்கு சராசரி 1,81,726 டன் நிலக்கரிதான் கிடைக்கப்பெற்றது.

இந்நிலையத்தின், இயந்திரங்களையும், தளவாடங்களையும் சீர்திருத்தம் செய்ததன் பலனாக ஜனவரி 1984 முதல் இந்த மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் உச்ச நிலையை எட்டியுள்ளது. இந்த அதிகபட்ச திறன் காரணமாகவும் தரம் குறைந்த நிலக்கரியின் காரணமாகவும் இந்நிலையத்தின் நிலக்கரி உபயோகம் மிகவும் அதிகரித்தது. இதனால் இந்நிலையத்தின் மூன்று பிரிவுகளும் நாள் ஒன்றுக்கு 9,000 டன் நிலக்கரி, அதாவது மாதம் ஒன்றுக்கு 2,70,000 டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இச்சூழ்நிலையின் காரணமாக தற்போது நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

3. ஹால்டியா துறைமுகத்தில் ஏற்படும் இடர்ப்பாடுகளின் காரணமாகவே தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு மிகவும் குறைவான அளவில் நிலக்கரி வந்து கிடைக்கிறது. கடந்த ஒரு வருட காலமாக, நிலக்கரி வந்து கிடைப்பதில் ஏற்படும் இடையூறுகளைப்பற்றி மத்திய அரசின், சம்பந்தப்பட்ட எல்லா துறைகளின் அனைத்து அதிகாரிகளுடனும் இதுகுறித்து தொடர்பு கொள்ளப்பட்டது. ஆயினும் எவ்விதமான திருப்திகரமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. எனவே, கையிருப்பு வைத்துக்கொள்ளும் பொருட்டு ஐந்து லட்சம் டன் நிலக்கரியை இறக்குமதி செய்ய மத்திய அரசிடம் இவ்வரசு கேட்டு வருகிறது. ஆனால் இதற்கு மத்திய அரசு இதுகாறும் அனுமதி அளிக்கவில்லை.

1984 மார்ச் 26]

நிலக்கரி போதுமான அளவு கிடைப்பது குறித்து சம்பந்தப்பட்ட மத்திய அரசு அதிகாரிகளோடு தீவிரமாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் பலனளிக்காத நிலையிலே இருந்தன. இச்சூழ்நிலையில், தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி பற்றாக்குறை நிலை மேலும் அதிகரித்த பொழுது, பொதுப் பணித் துறை செயலாளர் மற்றும் மின் வாரியத் தலைவரோடு 7—2—1984 அன்று நான் டெல்லி சென்று, மத்திய எரிசக்தி, கப்பல் போக்குவரத்து, நிதி முதலிய அமைச்சர்களுடனும். எரிசக்தித் துறை இராஜாங்க அமைச்சருடனும் மற்றும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தினேன். இதன் விளைவாக மாதம் ஒன்றுக்கு ஹால்டியா துறைமுகம் வழியாக 1,60,000 டன், பாரதீப் துறைமுகம் வழியாக 40,000 டன், மற்றும் சான்டா நிலக்கரி சுரங்கங்களிலிருந்து 10,000 டன் நிலக்கரி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஒழுங்கு முறைகூட தூத்துக்குடி மின் நிலையத்தின் முழு தேவையையும் பூர்த்தி செய்யாது. தூத்துக்குடி மின்நிலையம், நிலக்கரி மற்றும் எரி எண்ணை கொண்டு இயங்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளித்து அதன்மூலம் நிலக்கரி கிடைக்கப் பெறும் வரையிலும், தேவையான எரி எண்ணெயை சலுகை விலையில் வழங்கும்படியும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மேற்கண்ட நடவடிக்கை தொடர்ந்து எடுத்து வருவதோடு தற்போது கிடைக்கப்பெற்றுவரும் நிலக்கரி மற்றும் எரி எண்ணெயைப் பயன்படுத்தி, தூத்துக்குடி அனல் மின் நிலையத்திலிருந்து, எந்தவித தடையும் ஏற்படாமல், தொடர்ந்து முழு அளவில் மின் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

[27 ஆம் பக்கத்தில் இனம் 2 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

கடந்த 1979-81 ல் தற்காலிகமான பட்டதாரி ஆசிரியர்களுக்கு என தேர்வாணைக் குழு சிறப்புத் தேர்வு ஒன்றினை நடத்தியதில் 1,143 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 1—4—1970 முதல் 3—3—1973 முடிய 'பி' பிரிவு பள்ளிகளிலும் 1—4—1970 முதல் 1973-74 ஆம் ஆண்டு முடிய 'ஏ' பிரிவு பள்ளிகளிலும் தற்காலிகமாக நியமிக்கப்பட்டு பின் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டுமே முன் தேதியிட்டு பணிவான் முறை பெற தகுதியுடையவர்கள். இவர்கள் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் அவர்கள் பெற்றுவந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெற அனுமதித்து ஆணைகள் ஏதும் பிறப்பிக்க அவசியமில்லை என பள்ளிக் கல்வி இயக்குநருக்கு தெளிவுரை வெளியிடப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1984 மார்ச் 26

2. மேலே குறிப்பிடப்பட்ட நாளுக்குப்பின் நியமிக்கப்பட்டு தேர்வாணைக் குழுவினால் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டோரின் பணியினையும் முன் தேதியிட்டு வரன்முறை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இதில் ஒரு முடிவு எடுத்த பிறகுதான் அவர்கள் தேர்வாணைக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு பெற்றுவந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெறத் தகுதி உடையவரா என்று முடிவு எடுக்க இயலும். எனினும், இதில் அரசின் ஆணையை எதிர்நோக்கி ஏற்கனவே அளிக்கப்பட்ட ஊதிய உயர்வுகளுக்கான தொகையை பிடித்தம் செய்ய வேண்டாமென எல்லா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS